# அரசு கல்வியியல் கல்லூரி

## குமாரபாளையம் - 638 183




# ஆண்டுமலர்

## 2016 – 2017

Scanned with CamScanner

## மலர்க்குழு

முனைவர் திருமதி. **வெ.கலைச்செல்வி** எம்.ஏ.,எம்.பில்.,எம்.எட்.,பிஎச்டி.,எம்பி.ஏ.,
(முதல்வர் மு.கூ.பொறுப்பு & தமிழ் இணைப்பேராசிரியர்)

திரு. **ஜெ.நவநீதகிருஷ்ணன்** எம்.எஸ்சி.,எம்.பில்.,(Edn) எம்.எட்.,
(கல்வியில் உதவிப்பேராசிரியர், கணிதம்)

திருமதி. **ஈ.சரண்யா** எம்.ஏ., (பி.எட்., இரண்டாமாண்டு, தமிழ்த்துறை)
(ஆண்டு மலர்ச் செயலர்)

செல்வன். **R.உதயகுமார்** எம்.ஏ., (பி.எட்., முதலாமாண்டு, ஆங்கிலத்துறை)



Scanned with CamScanner

# அரசு கல்வியியல் கல்லூரி,

**குமாரபாளையம் - 638 183.**

**நாமக்கல் மாவட்டம்.**

## ஆண்டறிக்கை 2016 - 2017

கல்லூரி ஆண்டு விழா சிறப்பு விருந்தினர் அவர்களே! பேராசிரியர் பெருமக்களே! அலுவலக அன்பர்களே! இனிய மாணவச் செல்வங்களே! உங்கள் அனைவரையும் இக்கல்லூரியின் 62-வது ஆண்டு விழா, விளையாட்டு விழா மற்றும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழா ஆகிய முப்பெரும் விழாவிற்கு வரவேற்று, சாதனைகள் நிறைந்த இவ்வாண்டு அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமை கொள்கிறேன்.

**கல்லூரியின் வரலாறு :**

இக்கல்லூரி 1955 - ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் பேராசிரியர் திரு.எஸ்.ஐசக் எம்.ஏ,எல்.டி., அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப்பெற்றது. குமாரபாளையத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியின் ஒரு பகுதியில் இயங்கி வந்த இக்கல்லூரி 1972 - ம் ஆண்டில் புதியதாகக் கட்டடம் கட்டப்பெற்றப்பின் இவ்விடத்திற்கு மாற்றப்பட்டது. இக்கல்லூரியில் 1959 - ம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பும், 1974 ஆம் ஆண்டு எம்.எட்., பகுதி நேர வகுப்பும் தொடங்கப்பெற்றன.

1989 ஆம் ஆண்டு பகுதி நேர வகுப்பாக இருந்த எம்.எட்., முதுநிலை பட்டவகுப்பு முழுநேர வகுப்பாக மாற்றப்பட்டது. அரசாணை எண். G.O.M.S. No. 543 Dt. 16.04.1990 ஆணையின்படி நமது கல்லூரி CTE (College of Teacher Education) அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு அந்தக் கல்வியாண்டிலேயே இக்கல்லூரியில் பெண்களும் சேர்ந்து படிக்க அனுமதி வழங்கப்பட்டது. இக்கல்லூரி மாணவ, மாணவியர்கள் தங்கிப் படிக்க ஏதுவாக 1990 - 91 கல்வியாண்டு முதல் இருபாலருக்கும் தனித்தனியே விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

**கல்லூரி மாணவர் சேர்க்கை :**

2008 - 2009 ஆம் ஆண்டு கல்வியாண்டு முதல் சென்னை தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்தில் (TNTEU) இணைவு பெற்று செயல்பட்டு வருகிறது. மேலும் இக்கல்லூரி தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேசிய அங்கீகாரக்குழு NAAC குழுவினரால் மறுஆய்வு செய்யப்பட்டு "B" தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

மாநில அளவில் விண்ணப்பித்தோரின் தரப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு 2008 - 2009 ஆம் ஆண்டு முதல் மாநில அளவில் பி.எட் சேர்க்கை கலந்தாய்வு முறையில் நடைபெற்று வருகிறது. மாணவர்கள் சேர்க்கை குழுவில் முதல்வர் தலைமையில் பேராசிரியர்கள் மற்றும் கல்லூரி நூலகர் செயல்பட்டனர்.

இவ்வாண்டு கலந்தாய்வு சென்னை, லேடி வெலிங்டன் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்றது. கலந்தாய்வில் தேர்வான மாணவர்கள் 20.08.2016 முதல் இக்கல்லூரியில் சேர்க்கப்பட்டனர். முதலாமாண்டு கல்லூரி வகுப்பு 07.09.2016 முதல் துவக்கப்பட்டது. இரண்டாமாண்டு கல்லூரி வகுப்பு 01.08.2016 முதல் துவக்கப்பட்டது.

2015-ஆம் கல்வியாண்டு வரை இக்கல்லூரி கோவை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்தது. 2016 முதல் தருமபுரி கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாணவர் மன்றங்கள் :**

கீழ்க்கண்ட அனைத்து மன்றங்களின் பொறுப்பாளர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டு, ஒற்றுமை உணர்விற்கும், பொறுப்புணர்விற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியுள்ளனர் என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக்கொள்கிறேன்.

Scanned with CamScanner

## 2016 - 2017 பி.எட்., இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டு மாணவர் மன்றம்

| வ.எ | பதவி | இரண்டாமாண்டு | முதலமாண்டு |
|---|---|---|---|
| 1 | மாணவர் தலைவர் | - | K.S.கிரண்குமார் |
| 2 | மாணவர் துணைத்தலைவர் | மா அனிதா | D.தர்ஷினி |
| 3 | ஆசிரியர் மன்றச் செயலர் | சீ.விஜயகுமார் | - |
| 4 | ஆசிரியர் மன்ற உதவிச் செயலர் | பா.பூங்கோதை | M.சதீஷ்குமார் |
| 5 | விளையாட்டுத்துறைச் செயலர் | - | A.ராஜேஸ்குமார் |
| 6 | சமூகப்பணி மன்றச்செயலர் | ந.நாகராஜ் | M.சுரேஷ்குமார் |
| 7 | ஆண்டுமலர் செயலர் | ஈ.சரண்யா | R.உதயகுமார் |
| 8 | கைகலைத்துறைச் செயலர் | ர.ரேணுகா | - |
| 9 | கேள்விக்காட்சிக்கல்வித்துறைச் செயலர் | பீ.இரஞ்சித் | K.முருகேசன் |
| 10 | பதிவேட்டுத்துறைச் செயலர் | ந.பவித்ரப்பிரியா | - |
| 11 | உயிரியல் துறைச் செயலர் | சீ.ரேவதி | A.ஆயிஷா |
| 12 | பொருளறிவியல் துறைச்செயலர் | நா.பிரியா | G.கார்த்திக் |
| 13 | கணிதத் துறைச்செயலர் | சி.கார்த்திகேயன் | T.சதீஷ் |
| 14 | ஆங்கிலத் துறைச்செயலர் | நே.சடையகுமார் | R.பவித்ரா |
| 15 | தமிழ்த் துறைச்செயலர் | ப.மலையாளன் | D.ராஜா |
| 16 | வரலாற்றுத் துறைச்செயலா | க.ஹேமலதா | R.கவிதா |
| 17 | நூலகத் துறைச்செயலா | ரா. ரம்யா | B.தமிழரசன் |
| 18 | இளைஞர்கள் செஞ்சிலுவை சங்கம் செயலர் | ந. சௌந்தரராஜன் | M.மணிகண்டன் |
| 19 | செஞ்சூருள் சங்கச் செயலர் | ப. ராமன் | - |
| 20 | தகவல் தொடர்பு தொழில் நுட்பத்துறை | த.அருண்குமார் | S.மதன் |

இம்மாணவ, மாணவிகள் அனைவரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட பணியினை மிகச் சிறப்பான முறையில் செய்து தங்களின் தனித் தன்மையை தக்க வைத்துக் கொண்டமைக்காக அனைவரையும் பாராட்டுகிறேன்.

**மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சி :**

இக்கல்வியாண்டில் பி.எட் இரண்டாமாண்டு பயிற்சி மாணவ, மாணவியர்கள் நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள பல்வேறு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 01.09.2016 முதல் 18.01.2017 முடிய 16 வாரங்கள் புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் உற்றுநோக்கல் பயிற்சியை மேற்கொண்டனர்.

| வ.எண். | பள்ளியின் பெயர் |
|---|---|
| 1. | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 2. | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 3. | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பவானி |
| 4. | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பவானி |
| 5. | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சித்தோடு |
| 6. | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சித்தோடு |
| 7. | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பள்ளிப்பாளையம் |
| 8. | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பள்ளிப்பாளையம் |
| 9. | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கவுந்தப்பாடி |
| 10. | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கவுந்தப்பாடி |
| 11. | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபளையம் |
| 12. | அரசு உயர்நிலைப்பள்ளி, படைவீடு |

Scanned with CamScanner

மேற்கண்ட பள்ளிகளில் கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள அனுமதியளித்த ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்ட கல்வி முதன்மை அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள், மாணவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த உதவிய தலைமையாசிரியர்கள், வழிகாட்டிகளாய் இருந்து ஊக்கப்படுத்தியுள்ள ஆசிரியர்கள் அனைவருக்கும் கல்லூரியின் சார்பில் உளம் நிறைந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

**மாணவர் / மாணவியர் விடுதிகள் :**

இக்கல்வியாண்டில் கல்லூரி விடுதியில் 55 மாணவர்களும் 68 மாணவியர்களும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்து தங்கி பயில்கின்றனர். விடுதியின் காப்பாளராக பொறுப்பு முனைவர் முதல்வர் வெ.கலைச்செல்வி உள்ளார். துணைக் காப்பாளராக முனைவர் வெ.மனோகரன் உள்ளார். மாணவியர்களுக்கான விடுதியில் பயிற்றுநராக இக்கல்லூரியின் பொறுப்பு முதல்வர் முனைவர் வெ.கலைச்செல்வி உள்ளார். இவ்விடுதியில் குறைந்த செலவில் நிறைவான வகையில் ஒப்பந்த அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 67.00 ரூபாய் என்ற முறையில் உணவு வழங்கப்படுகிறது. விடுதியின் ஒப்பந்ததாரர்கள் திரு.சபி மற்றும் பாலாஜி, சமையலர் மற்றும் உதவியாளர்கள் அனைவருக்கும் கல்லூரியின் சார்பில் என் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2016 - 2017 கல்வியாண்டின் சிறப்பு நிகழ்வுகள் :**

1) கல்லூரி துவங்கி 62 ஆண்டுகளுக்குப் பிறகு கல்லூரியின் நீண்ட நாளாக திட்டமிடப்பட்டிருந்த முன்னாள் மாணவர்கள் சங்கம் 25.09.2016 ஞாயிறு அன்று முன்னாள் மாணவர்கள் வந்து கலந்து கொள்ள ஏதுவாக விழா நடத்தப்பட்டது. இந்தியன் வங்கி, குமாரபாளையம் கிளையில் “OSA” எனப்படும் முன்னாள் மாணவர் சங்கத்திற்கான வங்கி சேமிப்புக்கணக்கு துவக்கப்பட்டு செயல்படத் துவங்கியுள்ளது என்பதை பெரும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் தலைவராக முதல்வர் (மு.கூ.பொறுப்பு) முனைவர் வெ.கலைச்செல்வி மற்றும் திருமதி.ஆர்.கலைவாணி, (ஆசிரியர் / முன்னாள் மாணவி) துணைத் தலைவராகவும், திரு.சக்திவேல் (முன்னாள் மாணவர்) செயலளாராகவும், திரு.ச.மணிவண்ணன் கல்லூரி இணை நூலகர் பொருளாளராகவும், திருமதி.அருள்ஜோதி (கௌரவவிரிவுரையாளர் / முன்னாள் மாணவி) இணைச் செயலராகவும் பெறுப்பேற்று முன்னாள் மாணவர் சங்கப்பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இதற்கு மனமுவந்து உறுப்பினர் சந்தா தொகை கொடுத்து, “OSA” நடைபெற உதவிய எமது இரண்டாமாண்டு மாணவ, மாணவியர்க்கு எமது நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

2) 30.09.2016 அன்று முனைவர் வெ.கலைச்செல்வி முதல்வர் (மு.கூ.பொறுப்பு) அவர்கள் தலைமையில் வரவேற்பு விழாவாக, இரண்டாமாண்டு மாணவ/மாணவியர் முதலாமாண்டு மாணவ/மாணவியர்களை வரவேற்று, பல போட்டிகள் நடத்தி பரிசுகள் கொடுத்து, பகடிவதை என்ற பேச்சிற்கு வழியில்லாது மகிழ்வித்தனர். பயிற்சி ஆசிரியர்கள் தங்களின் சகோதர மனப்பான்மையை வெளிக்காட்டி முதலாமாண்டு பயிற்சி ஆசிரியர்களை வரவேற்று நல்லதொரு முன் உதாரணமாக திகழ்ந்தது.

3) 30.11.2016 முதல் 02.12.2016 வரையிலான 3 நாட்கள் Heartful Institute of Meditation மூலம் பி.எட்., மாணவ/மாணவியர்களுக்கு தியானம் குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி வகுப்புகள் திரு.S.P.கார்த்திகேயன், திருமதி.V.ராஜலட்சுமி மற்றும் திருமதி.M.ரம்யா ஆகியோர் சிறப்புற நடத்தினர்.

4) இக்கல்லூரியில் முன்னாள் மாணவர் திரு.எம்.ராஜா, உதவி ஆணையர், மத்திய புலனாய்வுத்துறை அவர்கள் மூலம், "போட்டித்தேர்வுக்கு தயாராவது எப்படி"? என்ற தலைப்பில் பி.எட்., மாணவ/மாணவியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி 20.12.2016 அன்று நடைபெற்றது.

5) நாமக்கல்லில் நடைபெற்ற கவிதை எழுதும் போட்டியில் - செல்வன்எ.கார்த்தி, பொருளறிவியல் துறை மாணவர் இரண்டாம் பரிசு பெற்று ரூ.7000/- ரொக்கப்பரிசு பெற்று கல்லூரிக்கு பெருமைச் சேர்ந்துள்ளார். அம்மாணவனுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

6) உலகத்திருக்குறள் பேரவை, குன்றக்குடியில் நடந்த மாநில அளவிலான கட்டுரைப்போட்டியில் எமது மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்றார்கள். அப்போட்டிகளை நடத்திய முனைவர் வெ.மனோகரன் அவர்களுக்கும், மாணவ / மாணவியர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

Scanned with CamScanner

7) 07.01.2017 அன்று இரண்டாமாண்டு மாணவ/மாணவியர்களும் பங்கேற்கும் வகையில், தமிழர் திருநாள், பொங்கல் பண்டிகை முதல்வர் (மு.கூ.பொறுப்பு) அவர்களின் தலைமையில் கல்லூரி வளாகத்தில் பொங்கல் செய்து வெகு சிறப்பாக மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. அதுசமயம் உறியடி விளையாட்டினை மாணவ/மாணவியர்கள் கலந்து கொண்டு புதிய அனுபவத்தினைப் பெற்றார்கள்.

8) 17.01.2017 முதல் 19.01.2017 முடிய கன்னியாகுமரியில் விவேகானந்தா கேந்திரியா நடத்திய மாநில அளவிலான இளைஞர் எழுச்சி விழாவில் நமது கல்லூரியைச் சார்ந்த 7 முதலாமாண்டு மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர். இதற்கு பின்புலமாக இருந்த கல்லூரி இணைநூலகர் திரு.ச.மணிவண்ணன் அவர்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9) YRC நிதியின் மூலம் 30.03.2016 நமது கல்லூரி வளாகத்தில் இருந்த சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டன.

10) ஜுலை 24.07.2016 முதல் 31.07.2016 வரை இலங்கை, பேராதுனியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் முதல்வர் (மு.கூ.பொறுப்பு) முனைவர் வெ.கலைச்செல்வி அவர்கள் கலந்து கொண்டார்.

11) டிசம்பரில் 02.12.2016 முதல் 09.12.2016 முடிய அசாம் மாநில கௌஹாத்தியில் நடைபெற்ற அனைத்திந்திய பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் கழகம் சார்பில் நடைபெற்ற கருந்தரங்கில் நமது கல்லூரியின் சார்பில் முதல்வர் (மு.கூ.பொறுப்பு) முனைவர்.வெ.கலைச்செல்வி அவர்கள் பங்கேற்றார்.

12) 26.01.2017 அன்று இந்திய குடியரசு தின விழா, முதல்வர் (மு.கூ.பொறுப்பு) முனைவர் வெ.கலைச்செல்வி அவர்கள் தலைமையில் தேசிய கொடியேற்றி கொண்டாடப்பட்டது.

13) கல்லூரிப் பேரவைத் துவக்க விழா 30.01.2017 அன்று முதல்வர் (மு.கூ.பொறுப்பு) அவர்கள் தலைமை வகிக்க, திண்டுக்கல் காந்தி கிராம நிகர்நிலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர்.ப.பாலசுப்பிரமணியன் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்று மாணவ/மாணவியர்களுக்கு இன்றைய தகவல் தொடர்பு தொழில் நுட்ப வளர்ச்சியும் பயன்பாடும் குறித்து விரிவாக சிறப்புரை நல்கினார்கள். அன்னாருக்கு எனது நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

14) பி.எட்., புதிய பாடத்திட்டத்தின் படி, பி.எட்., மாணவ/ மாணவியர்களுக்கு கைக்கலை பயிற்சி மற்றும் நாடகம் போன்ற விழிப்புணர்வும் பயிற்சி அளிக்கும் வகையில் 14.02.2017 முதல் 15.02.2017 ஆகிய இரு நாட்களில் கோவையை சார்ந்த திருமதி.வசந்தகுமாரி மற்றும் செல்வி.சுசிகலா ஆகியோர் மாணவ/மாணவியர்களுக்கு பயிற்சி அளித்தனர். இதில் லைப்பன் வொர்க், கோர் ஆர்ட், மதுபாணி ஓவியங்கள், மதுவல்லி, ஜார்தோஷி, புல்காதி, கட்ச், கஷிதி மற்றும் லேப்ரி டெய்சி போன்ற வேலைபாடுகளில் பயிற்சி அளித்தனர். இதற்கான செலவினங்களை கல்லூரி பெற்றோர் - ஆசிரியர் கழக நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

15) பி.எட்., இரண்டாமாண்டு மாணவர்களின் கல்விச் சுற்றுலாவாக 16.02.2017 அன்று பவானி, கூடுதுறையில் உள்ள சங்கமேஸ்வரர் ஆலயம் சென்று வந்தனர். பிரசித்தி பெற்ற இத்தலத்தின் சிறப்புகளை சேகரித்தும், புகைப்படங்கள் சேகரித்தும், குறிப்புகளை பெற்று அவற்றை பதிவேடுகளில் பதிவு செய்து, செய்முறை தேர்வுக்கு பயனள்ள செயல்பாடாக அமைந்தது. இதனை கல்லூரியின் இணைநூலகர் திரு.ச.மணிவண்ணன் ஒருங்கிணைக்க கௌரவ விரிவுரையாளர்கள் உடன் சென்று சிறப்புடன் நடத்தி வந்தனர். அவர்களுக்கு எனது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

16) 17.02.2017 அன்று பி.எட்., இரண்டாமாண்டு மாணவ/மாணவியர்களுக்கு நாடகம் குறித்த விழிப்புணர்வு அளிக்கும் வகையில் திரு.த.தீலிப்குமார், துறைத்தலைவர் ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் அவர்கள் மற்றும் அவரது குழுவினர் பயிற்சி அளித்தனர். இதன் மூலம் மாணவ/மாணவியர்கள் படைப்பாற்றல் திறன் மேம்படுத்தப்பட்டு, இதனையும் பதிவேடுகளில் மாணக்கர்கள் பதிவு செய்து பயன்பெற்றனர்.

17) இரண்டாமாண்டு பி.எட்., மாணவ/மாணவியர்களுக்கான செய்முறைத் தேர்வு 20.02.2017 மற்றும் 21.02.2017 ஆகிய தேதிகளில் திருமதி.முனைவர் எஸ்.செல்வி முதல்வர்(பொ) வேலூர் அரசு

Scanned with CamScanner

கல்வியியல் கல்லூரி மற்றும் முனைவர்.எ.செல்வராஜ் உதவிப்பேராசிரியர் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டன.

18) இரண்டாமாண்டு பி.எட்., மாணவ/மாணவியர்கள் வேலை வாய்ப்புக்கு பயன் அளிக்கும் வகையில் ஆசிரியர் பணி வேலைவாய்ப்பு குறித்து 08.03.2017 அன்று பவானியை சார்ந்த திரு.ர.செல்வக்குமார் அவர்கள் பல தகவல்களை அளித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

**நூலகச் செயல்பாடுகள் :**

2016-2017 ஆம் ஆண்டு நூலகத்திற்கு ரூ. 16,000/- அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 62 புத்தகங்கள் வாங்கப்பட்டன. Education Tracks, Carrier 125, ஜேர்னல் ஆப் இந்தியன் எஜிகேசன், என்.சி.ஆர்.டி. பப்ளிகேஷன், தமிழரசு, தி இந்து மற்றும் எம்ப்ளாய்மெண்ட் நியூஸ் ஆகிய புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள் மாணவர்களின் பயன்பாட்டிற்காக வாங்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் எம்ளாய்மெண்ட் நியூஸ் பத்திரிக்கையை கல்லூரி இணைநூலகர் திரு.ச.மணிவண்ணன் அவர்கள் தனது செலவில் நூலகத்திற்கு அளித்துள்ளார். முன்னாள் மாணவர் சங்கம் மற்றும் பெற்றோர், ஆசிரியர் கழகத்தின் மூலமாகவும், நாளிதழ் மற்றும் மாத இதழ் நூலகத்திற்கு வாங்கப்பட்டது.

பி.எட். முதலமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவிகள், கல்லூரி நூலகத்தின் முற்றிலும் திறந்த முறை (Open Access System) மற்றும் நூலக இணையதளம் ஆகியவற்றை முழுவதும் பயன்படுத்தி வருகின்றனர். கல்லூரி நூலகத்தில் மொத்தம் 14,600 புத்தகங்கள் உள்ளன. கல்லூரி நூலகத்தில் மாணவர்களால் இந்த ஆண்டு மட்டும் சுமார் 4,025 புத்தகங்கள் பயன்படுத்தப்பட்டன.

**கல்லூரியின் வளர்ச்சிப் பணிகள் :**

- 2016-2017 ஆம் நிதியாண்டில் திட்டமில்லா தலைப்பின் கீழ் ரூ. 12,000/- ICT ஆய்வகத்திலுள்ள 15 கணிணிகளுக்கு K7 எனும் Antivirus மற்றும் Printer களை செம்மை செய்து (ICT) தகவல் தொடர்பு தொழில் நுட்ப ஆய்வகத்தினை மேம்படுத்தி, மாணவ / மாணவியர் செயல்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.
- கௌரவ விரிவுரையாளர்கள் நான்கு பேர்களுக்கு (உயிரியல், வரலாறு, ஆங்கிலம் மற்றும் பொருளறிவியல்) சுமார் ரூ.6,00,000/- ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.
- முதலாமாண்டு மாணவ, மாணவியர்கள் பிப்ரவரி 2017-இல் S.S.M. Central பள்ளிக்கும், S.S.M.மெட்ரிக்குலேசன் பள்ளிக்கும், பள்ளிச் செயல்பாடுகளைப் பார்வையிடச் சென்றனர். அதற்கு அனுமதி அளித்த அப்பள்ளிகளின் தாளாளர்களுக்கும், முதல்வர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.
- விளையாட்டுத்துறைக்கு தேவையான பொருட்கள் வாங்க ரூ.17,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான செலவினங்களை விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் முனைவர் வெ.மனோகரன் அவர்கள் மேற்கொண்டார்.
- நூலகத்திற்கு தேவையான புத்தகங்கள், இணைநூலகர் திரு.ச.மணிவண்ணன் அவர்கள் மூலம் ரூ.16,000/- செலவில் பெறப்பட்டு மாணவ / மாணவியர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- வகுப்பறைகள் மற்றும் உயிரியல்துறை ஆய்வகத்திற்கு தேவையான பூட்டுகள் ரூ.2000/- மதிப்பில் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**அலுவலகப் பணி :**

**1. உதவி தொகை :**

மாணவர் நலன் பேணும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்வி உதவித் தொகை **ரூ.3,66,150/-** பெற்றுத்தரப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான கல்வி உதவித் தொகை **ரூ.4,41,346/-** பெற்றுத்தரப்பட்டுள்ளது.

**2. பொதுப்பணித்துறை நிதி :**

பொதுப்பணித்துறை கட்டடங்கள் கட்டுவதற்கான நிதியாக **ரூ.8,00,000/- லட்சமும்,** மின்சாரம் தொடர்பான பணிக்காக **ரூ.2,00,000/- லட்சமும்** ஒதுக்கீடு செய்யப்பட்டு முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது கீழ்க்கண்டவாறு.

Scanned with CamScanner

- பெண்கள் கழிவறைக்கு தேவையான 3 குழாய் பைப்புகள், மின் விளக்குகள்
- அலுவலர் கழிப்பறைக்கு 3 குழாய்கள் மற்றும் 3 Wash Tops
- ஆண்கள் கழிப்பறைக்கு 4 குழாய்கள்
- வளாகத்தில் உள்ள சைக்கிள் ஸ்டேண்ட் கூரை அமைக்கப்பட்டு, அதில் மாணவர்கள் தங்கள் வாகனங்களை பாதுகாப்பாக நிறுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.
- டாக்டர்.ராதாகிருஷ்ணன் கலை அரங்கில் மழைநீர் செல்லும் வாய்க்கால் மாற்றுத்திறனாளி மாணவர்கள் நடந்து செல்ல ஆபத்தாக இருந்ததால் அவைகளை பாதுகாப்பாக மூடி, டைல்ஸ்கள் பொறுத்தப்பட்டு, தரைதளம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. கலை அரங்கம், பொது விரிவுரை அறைகள் இரண்டும், வர்ணப்பூச்சு பூசி புதுமை செய்யப்பட்டுள்ளது. மாணவ / மாணவிகள் உணவு அருந்த வசதியாக கலை அரங்கில் பின்புறமுள்ள வெளிப்பகுதியை டைல்ஸ் பொருத்தி, கை கழுவும் வசதிக்கு தண்ணீர் பைப்புகள் பொருத்தப்பட்டுள்ளது. நாய்கள் தொல்லை வராமலிருக்க தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது.
- UGC நிதியின் கீழ் மாணவ / மாணவியர்கள் தேவைக்காக சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிக்காக "R.O. System" ரூ.30,500/- செலவில் அமைக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.
- ஆண்/பெண் விடுதிகளில் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் தங்கியுள்ளனர். அவர்கள் துணி துவைப்பதற்கு வசதியாக ஆண்கள் விடுதிக்கு 3 துவைக்கல்மேடைகளும், பெண்கள் விடுதிக்கு 2 துவைக்கல் மேடைகளும் தண்ணீர் குழாய் வசதியுடன் செய்யப்பட்டுள்ளன.
- ஆண்கள் விடுதியின் தண்ணீர் தேவையை அதிகரிக்கும் பொருட்டு பழுதான ஆழ்துளை கிணறு செம்மை செய்யப்பட்டு மாணவர்கள் அன்றாட நீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் பழுதான Sun Shade களை அகற்றி, புதியதாக அலுமினிய தகட்டால் Sun Shade வசதி செய்யப்பட்டுள்ளது. ஆண்கள் விடுதியின் பிரதான வாசல்கதவு பழுதானதால் அதனை நீக்கி, இரும்பிலான கதவு பொருத்தப்பட்டுள்ளது.
- பெண்கள் விடுதியின் பாதுகாப்பு சுவர் மேல் முள்கம்பிவேலி அமைக்கப்பட்டு, பாதுகாப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது. பி.எட்., பட்டப்படிப்பு ஈராண்டாக 2015-2016 முதல் மாற்றம் செய்யப்பட்டதால் ஆண்கள் விடுதியில் மாணவர்கள் கூடுதலாக தங்க வேண்டியுள்ளதால், முதல் மாடியிலுள்ள அறைகளுக்கு தேவையான குழல் விளக்குகள், மின்வசதிக்கான ஸ்விட்ச் பெட்டிகள் மற்றும் குளியல் அறைக்கு தேவையான மின்விளக்கு வசதிகள், போர்க்கால அடிப்படையில் முதல்வரின் முயற்சியில் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- இரண்டாமாண்டு மாணவர்கள் தங்கியுள்ள தரைத்தளம் மற்றும் அறைகளுக்கு தேவையான குழல் விளக்குகள், மின்விசிறி மற்றும் அதற்கான உதிரி பாகங்கள் மற்றும் சமையலறை உணவு கூடத்திற்கு தேவையான குழல் விளக்குகள் செம்மை செய்யப்பட்டு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக 70 பேர் தங்கியுள்ள விடுதிகளில் தற்போது சுமார் 140 மாணவ/மாணவியர் தங்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.
- பெண்கள் விடுதியில், முதலாமாண்டு மாணவர்கள் தங்கியுள்ள தரைத்தள அறைகளுக்கு பழுதான மின் சுவிட்சுகள், மின்விசிறி பாகங்கள் மற்றும் குழல்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.
- இரண்டாமாண்டு மாணவிகள் தங்கியுள்ள முதல் தளத்தின் அறைகளுக்கு தேவையான குழல் விளக்குகள், பழுதான மின் சுவிட்சுகள், குளியலறைகளுக்குத் தேவையான குழல் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.
- மாணவர் விடுதி கழிப்பறையில் டைல்ஸ்கள் பழுது நீக்கப்பட்டுள்ளன.
- இப்பணிகள் யாவும் முதல்வர் அவர்களின் நேரடி கண்காணிப்பும், அறிவுரைகளின்படி பொதுப்பணி துறையினரால் மேற்கொள்ளப்பட்டு மாணவ/மாணவியர்களின் நலன் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதனை இத்தருணத்தில் தெரிவிப்பதில் பெரும் மகிழ்வு கொள்கிறேன்.
- IQAC நிதியின் கீழ் முதல்வர் மாணவ/மாணவியர்களுக்கு தகவல்/செய்தி பரிமாற முதல்வர் அறையில் தகவல் தொடர்பு சாதனம் 3 ஒலிபெருக்கியும், அமைக்கப்பட்டுள்ளது.

Scanned with CamScanner

- இரண்டு பொதுவிரிவுரை அறைகளுக்கு தேவையான மின்விளக்குகள், மின்விசிறி பாகங்கள் செம்மை செய்யப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.
- M.Ed., வகுப்பறைகளுக்குத் தேவையான மின் குழல் விளக்குகள், அலுவலகத்திற்கு தேவையான குழல்விளக்குகள், அழைப்புமணி பொருத்தப்பட்டுள்ளன.
- IQAC அறைக்கு தேவையான மின் சாதனங்கள் AC ஆகியன பொருத்தப்பட்டு, வரும் ஆண்டில் NAAC தரச்சான்றின் மறு ஆய்வுக்கு வேண்டிய பணிகள் துவங்கப்பட்டுள்ளன.
- ஆசிரியர் குடியிருப்புக்கு வேண்டிய மின் வசதிகள் பழுது பார்த்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

### 3. திட்டமில்லா தலைப்பின் கீழ் நிதியுதவி :

தமிழக கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் நிதி ஒதுக்கீடாக நூலக புத்தகங்கள் வாங்குவதற்காக **ரூ.16,000/-மும்,** இயந்திரங்கள் மற்றும் ஆய்வக உபகரணங்கள் வாங்கும் பொருட்டு **ரூ.17,000/-மும்,** பழுதுபார்ப்பு பணிக்கான **ரூ.2,000/-** Machinery and Equipment க்காக **ரூ.12,000/-மும்** ஒதுக்கீடு செய்யப்பட்டு அது முறையாக பயன்படத்தப்பட்டு கல்லூரியின் உள்கட்டமைப்பு வலுவூட்டப்பட்டுள்ளது.

### 4. பல்கலைக்கழக நிதிநல்கைக்குழு :

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் மூலம் XII Plan Inservce Programme **ரூ.3,00,000/-மும்,** IQAC-மூலம் **ரூ.3,00,000/-** கல்லூரி வளர்ச்சி பணியின் பொருட்டு அலுவலகத்தின் மூலம் 2013 - 2014-ம் ஆண்டில் பெறப்பட்டு அத்தொகையை 2017-லில் செலவிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### 5. மைய அரசின் நிதியுதவி :

இவ்வாண்டு மார்ச் 2017-லில் 12-ம் திட்டத்தின் சீழ் மத்திய/மாநில அரசு மான்ய திட்டத்தில் பணியிடைப்பயிற்சி மற்றும் ஆராய்ச்சி பணிகள் மேற்கொள்ள ரூ.3,00,000/- பெறப்பட்டது. இப்பணியிடைப்பயிற்சிக்கு நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் சேலம் கல்வி மாவட்டங்களைச் சார்ந்த இடைநிலை / முதுநிலை பட்டதாரி ஆசிரிய / ஆசிரியர்கள் சுமார் 167 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். இப்பணியிடைப்பயிற்சி மற்றும் பணிமனை 16.03.2017 முதல் 31.03.2017 வரை நடைபெற்றது. குறுகிய கால இடைவெளியில், இப்பணியிடைப்பயிற்சியை சிறப்புற நடத்திட உறுதுணையாக செயல்பட்ட கல்லூரி ஆசிரியர்கள், இணைநூலகர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், நன்றிகளையும் உரித்தாக்குகிறேன்.

### 6. பணி நியமனங்கள் :

- சென்ற 23.07.2016 அன்று முதல்வர் முனைவர். S. ராஜேந்திரன் அவர்கள் பதவி உயர்வு பெற்று கரூர், அரசு கலைக்கல்லூரிக்கு முதல்வராக சென்ற பின்னர் முதல்வர் பொறுப்பினை திரு.ஜெ.நவநீத கிருஷ்ணன், கல்வியியல் கணித உதவிப் பேராசிரியர் பெற்றுக்கொண்டார். பின்னர் 01.08.2016 முதல் முதல்வர் (மு.கூ.பொறுப்பு) ஆக முனைவர் வெ.கலைச்செல்வி ஆகிய, நான் பொறுப்பேற்றுக் கொண்டு செயல்பட்டு வருகிறேன்.
- திருமதி.செ.ஷகிலா உதவியாளர், 01.08.2016 முதல் கோவை, கல்லூரி கல்வி இணை இயக்குநர் அலுவலகத்திற்கு மாறுதல் பெற்று சென்றுள்ளார். பதிவறை எழுத்தாளர் திரு.கு.பழனியப்பன் பதவி உயர்வு பெற்று, குமாரபாளையம், அரசு கலை அறிவியல் கல்லூரிக்கு 01.08.2016 முதல் இளநிலை உதவியாளராக பணி உயர்வு செய்யப்பட்டார்.
- கல்லூரியின் பெருக்குபவர் மற்றும் இரவுக்காவலர் பணிகளுக்கு ஆட்கள் அமையாத நிலையில், இரவுக்காவலராக திரு.குருசாமி என்பாரும், பெருக்குபவர் பணிக்கு திருமதி.மகேஸ்வரி என்பாரும் தற்காலிகப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### கல்லூரி விழாக்கள் :

இக்கல்லூரி வளாகத்தில் 25.09.2016 இல் முன்னாள் மாணவர்கள் சங்க விழா, 30.09.2016 இல் முதலாமாண்டு மாணவர்களை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் வரவேற்றல் விழா, 15.10.2016 பெற்றோர் ஆசிரியர் கழகம் முதலாமாண்டு மாணவர்கள் விழா, 30.11.2016 இல் தியான வகுப்பு, 17.12.2016 இல் பட்டமளிப்பு விழா, 20.12.2016 இல் "போட்டி தேர்வுக்கு தயாராவது எப்படி?" என்ற சொற்பொழிவு, 04.02.2017 இல் பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டம் போன்ற விழாக்கள் சிறப்பாகக்

Scanned with CamScanner

கொண்டாடப்பட்டன. இதில் முதல்வர், பேராசிரியர்கள், கல்லூரி நூலகர் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

**1. கல்லூரிப் பேரவை மற்றும் அனைத்து மன்றங்களின் தொடக்க விழா :**

62-வது கல்லூரி பேரவை மற்றும் அனைத்து மன்றங்களின் துவக்க விழா 30.01.2017 அன்று பொறுப்பு முதல்வர் முனைவர். திருமதி.வெ.கலைச்செல்வி அவர்கள் தலையேற்க, திண்டுக்கல் - காந்திகிராம நிகர்நிலைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். ப.பாலசுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற இனிதே நடைபெற்றது. இதில் முதலாமாண்டு மாணவர் தலைவர், மாணவியர் தலைவி மற்றும் துறைச்செயலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**2. சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை :**

ஆன்மீக சிந்தனையை வளர்க்கும் அளவில் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை கொண்டாடப்பட்டு மாணவர்கள் உற்சாகமூட்டப்பட்டு நல்வழிப்படுத்தப்பட்டனர்.

**3. பாடி வாழ்க்கை முகாம் :**

பாடி வாழ்க்கை முகாமின் செயல்பாடாக முதலாமாண்டு பி.எட்., மாணவ/மாணவியர்களுக்கு சாரண/சாரணியர் இயக்கம் குறித்த தோற்றம், செயல்பாடுகள் ஆகியவற்றை அறியும் வகையில் பவானி SSM மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் (நிர்வாகம்) திரு.ஆர்.பார்த்திபன் அவர்களும், திரு.ஆர்.நாகராஜ், கணித ஆசிரியர் அவர்களும் தொடந்து பயிற்சியினை 07.04.2017 அன்று நிகழ்த்தினர். அன்றைய தினமே, இரண்டாமாண்டு பி.எட்., மாணவ/மாணவியர்களுக்கு பயனுள்ள TET தேர்வு குறித்த விழிப்புணர்வு, அதனை எதிர்கொள்ளும் நுணுக்கங்களை முனைவர்.எஸ்.மணிகண்டன், உத்தம சோழபுரம் DIET, சேலம் அவர்கள் விளக்கினார்.

அதேசமயம் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு இப்பயிற்சியின் ஒரு பகுதியாக ஆசிரியர் தகுதித் தேர்வை எதிர்கொள்ளுவது தொடர்பான விழிப்புணர்வு வகுப்பு சேலம், உத்தமசோழபுரம் DIET பேராசிரியர் முனைவர் பீட்டர் ஆனந்த் அவர்களால் நடத்தப்பட்டது. இப்பயிற்சி வகுப்பு மிகவும் பயனுடையதாக அமைந்தது. இரண்டாம் நாள் நிகழ்வாக 08.04.2017 அன்று கல்லூரி வளாகத்தில் இருந்த சீமைக்கருவேல மரங்கள் சாரண / சாரணியர் பயிற்சி முகாம் மூலம் அகற்றப்பட்டன. மேலும் கல்லூரி வளாகத்தை பசுமையாக்கும் பொருட்டு 20 விதைப்பந்துகள் மாணவ / மாணவியரால் நடப்பட்டன. 35 நாட்டு மரங்கள் கல்லூரி வளாகம் முழுவதும் நடப்பட்டன.

**4. பட்டமளிப்பு விழா :**

17.12.2016 அன்று 2014-2015 ஆம் கல்வியாண்டில் பி.எட்., தேறிய மாணவ/மாணவியர்களுக்கு பட்டமேற்பு விழா, முதல்வர் (மு.கூ.பொறுப்பு) முனைவர் வெ.கலைச்செல்வி அவர்கள் தலைமையில் கல்வியல் உதவிப்பேராசிரியர் முனைவர் வெ.மனோகரன் ஒருங்கிணைப்பாளராக செயல்பட, சிறப்புடன் நடைபெற்றது.

**5. தைப் பொங்கல் :**

தமிழர் திருநாளாகிய தைப்பொங்கல் 07.01.2017 அன்று சமத்துவப் பொங்கலாக இரண்டாமாண்டு மாணவ/மாணவியர்கள் பங்கேற்கும் வகையில், தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகை முதல்வர் முனைவர் வெ.கலைச்செல்வி (மு.கூ.பொறுப்பு) அவர்களின் தலைமையில், பேராசிரியர்கள் முன்னிலையில் மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் பொங்கல் செய்து வெகு சிறப்பாக மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. அதுசமயம் உறியடி விளையாட்டினை மாணவ/மாணவியர்கள் கலந்து கொண்டு புதிய அனுபவத்தினைப் பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**6. முப்பெரும் விழா :**

2016-2017 ஆம் கல்வியாண்டறிக்கை விளையாட்டு போட்டிகளை விளையாட்டுத்துறையின் பொறுப்பு ஆசிரியர் முனைவர்.வெ.மனோகரன் கல்வியியல் உதவிப் பேராசிரியர் அவர்கள் 01.03.2017 முதல் 04.03.2017 வரை நடத்தினார். இந்த விளையாட்டு போட்டிகளில் முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு மாணவ / மாணவியர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தம் திறமைகளை வெளிபடுத்தியுள்ளனர். குறிப்பாக மாற்றுத்திறனாளியாகிய செல்வன் **V.சரவணன்** என்ற மாணவர் பார்வையற்றோருக்கான கைப்பந்து விளையாட்டுப்போட்டியில் மாநிலத்திலேயே முதல்பரிசாக கோப்பையை வென்று, நமது கல்லூரிக்கு பெருமைச் சேர்த்துள்ளார். அம்மாணவனுக்கும், விளையாட்டு போட்டிகளில் பல்வேறு பரிசு பெற்ற மாணவ / மாணவியர்களுக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். தனியாக விளையாட்டுத்துறை இயக்குநர் இல்லாத நிலையில், பொறுப்பு ஆசிரியராக முனைவர்.வெ.மனோகரன் அவர்களுக்கும், விளையாட்டு

Scanned with CamScanner

போட்டிகளில் கலந்து கொண்ட அனைத்து மாணவ / மாணவியருக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கல்லூரியின் 62-வது ஆண்டு கலைவிழாப் போட்டிகள் திரு.ச.மணிவண்ணன் அவர்கள் இணைநூலகர், ஒருங்கணைப்பாளராக செயல்பட்டு, பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ரங்கோலி கோலப்போட்டி, கதை சொல்லும் போட்டி, ஆடை அலங்காரப்போட்டி என மாணவ / மாணவியர்களின் கலை மற்றும் படைப்புத்திறன்கள் வெளிக்கொணரும் வகையில் மார்ச் 2017-ல் நடத்தியுள்ளார். இதில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள மாணவ / மாணவியர்களுக்கும் ஒருங்கிணைப்பாளர் கல்லூரி இணைநூலகர் திரு.ச.மணிவண்ணன் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களை உரித்தாக்குகின்றேன்.

**ஆசிரியர்களின் பணிசார்ந்த நிகழ்வுகள் :**

இன்று சுட்ட செங்கற்களாக இருக்கும். மாணவர்களை நாளை கட்டிவைத்த மாளிகைகளாக்கும் முயற்சியில் தங்களை அர்பணித்துக் கொண்டிருக்கும் பேராசிரியர்களின் இவ்வாண்டிற்குரிய அரிய பணிகள் தங்களின் சிந்தனைக்கு....

**ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் கல்லூரி தொடர்பான பணிமேல் சென்ற கூட்ட விவரங்கள்**

1. **திருமதி.முனைவர் வெ.கலைச்செல்வி (மு.கூ.பொறுப்பு) :**

- 2016-2017-ம் கல்வியாண்டு பி.எட்., கற்பித்தல் பயிற்சி அனுமதி பெற ஈரோடு முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகம் சென்றார்.
- 19.08.2016 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் ரேகிங் ஒழிப்பு - ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார்.
- 11.11.2016 அன்று சென்னையில் நடைபெறும் பொதுப்பணித்துறை கல்லூரியின் கட்டிடங்கள் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார்.
- சேலம், பெரியார் பல்கலைக்கழக நூலகத் தகவல் துறை நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் 23.11.2016 அன்று கலந்து கொள்ளச் சென்றார்.
- ஆண்டு திட்ட அறிக்கை தொடர்பாக செலவினம் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பான கூட்டம் சென்னை லேடி வெலிங்டன் கல்லூரியில் 01.02.2017 அன்று நடைபெறுவதால் அக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார்.
- காந்தி கிராமம், லட்சுமி கல்வியியல் கல்லூரிக்கு செயல்முறை தேர்வாளர்களாகக் கலந்து கொள்ள 17.02.2017 மற்றும் 18.02.2017 வரை சென்றார்.
- ஸ்ரீ ராம கிருஷ்ணா கல்வியியல் கல்லூரி, விருபாட்சிபுரம், தருமபுரி மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளுக்கு செயல்முறை தேர்வாளாராக 22.02.2017 முதல் 25.02.2017 முடிய சென்றார்.
- சென்னையில் நடைபெறும் RUSA திட்டம் தொடர்பான செலவினங்களுக்கான தணிக்கையில் கலந்து கொள்ள பிறபணி மேல் 03.03.2017 சென்றார்.

2. **திரு.ஜெ.நவநீத கிருஷ்ணன் :**

- பி.எட்., இரண்டாம் ஆண்டு மாணவ / மாணவியர்கள் கற்பித்தல் பயிற்சிக்கு ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் பள்ளிகளுக்கு செல்ல அனுமதி கடிதம் பெற்று வரச் சென்றார்.
- காந்தி கிராமம், லட்சுமி கல்வியியல் கல்லூரிக்கு செயல்முறை தேர்வாளர்களாகக் கலந்து கொள்ள 17.02.2017 மற்றும் 18.02.2017 வரை சென்றார்.
- சென்னையில் நடைபெறும் RUSA திட்டம் தொடர்பான செலவினங்களுக்கான தணிக்கையில் கலந்து கொள்ள பிறபணி மேல் 03.03.2017 மற்றும் 01.04.2017 ஆகிய நாட்களிலும் சென்று வந்தார்.

3. **திரு.முனைவர் வெ.மனோகரன் :**

- பி.எட்., இரண்டாம் ஆண்டு மாணவ / மாணவியர்கள் கற்பித்தல் பயிற்சிக்கு நாமக்கல் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் பள்ளிகளுக்கு செல்ல அனுமதி கடிதம் பெற்று வரச் சென்றார்.
- 08.11.16 மாலை 5 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், கல்லூரிகளில் உள்ள தங்கும் விடுதிகளில் நிகழும் சம்பாவித சம்பவங்கள் தொடர்பாகவும், எதிர்காலத்தில்

Scanned with CamScanner

இந்நிகழ்வினை தடுத்தல் தொடர்பாக எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாகவும் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார்.

- விவேகானந்தா பொறியியல் கல்லூரியில் நடைபெறும் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளச் சென்றார்.
- 16.03.2017 முதல் 18.03.2017 முடிய இக்கல்லூரியில் நடைபெற உள்ளது. கரூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் அனுமதி பெற சென்றார்.

**4. திரு.ச.மணிவண்ணன் :**

- பி.எட்., இரண்டாம் ஆண்டு மாணவ / மாணவியர்கள் கற்பித்தல் பயிற்சிக்கு ஈரோடு மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் பள்ளிகளுக்கு செல்ல அனுமதி கடிதம் பெற்று வரச் சென்றார்.
- ஈரோடு மாவட்ட கருவூலத்தில் நடைபெற்ற புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் 2012 தொடர்பான கூட்டத்திற்கு கலந்து கொள்ளச் சென்றார்.
- சிறப்புப்பள்ளி - உற்றுநோக்கல் பயிற்சி, முதலாமாண்டு மாணவ / மாணவியர்களுக்கு 16.03.2017 முதல் 18.03.2017 முடிய இக்கல்லூரியில் நடைபெற்றது. இது சம்மந்தமாக ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் அனுமதி பெற சென்றார்.

இக்கல்வியாண்டில் கல்லூரி சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும், கௌரவ விரிவுரையாளர்களக்கும், மாணவக் கண்மணிகளுக்கும், அலுவலக நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.



Scanned with CamScanner

## நட்பு

அன்பு தோழமையே!!!
கடந்த காலத்தில் நீ
எனக்கு தொடுவானம்
நிகழ் காலத்தில் நீ
எனக்கு தாய் பூமி
எதிர் காலத்தில் நீ
எனக்கு செவ்வாய்
உன் தோள் சாய்கையில்
உலகில் மீண்டும்
இறந்து பிறக்க ஆசை
நீ கோதில் தடவுகையில்
தென்றலை உணர்ந்தேன்
அடுத்த ஜென்மத்தில்
மீண்டும் மீண்டும்
நீயே வேண்டும் !!!
அன்னையாகவும் அல்ல!
ஆசானாகவும் அல்ல!
என்னில் பாதியாகவும் அல்ல!
என் தோழமையாக மட்டுமே!
மீண்டும் மீண்டும்
நீயே வேண்டும் !!!
எப்போதும் நீ என்னுள்
உன்னை திணிக்கவில்லை
என்னையே என்னுள்
ஊன்றி என் தன்னம்பிக்கையை
வளர்த்தாய்!
என்றும் நாம் இருவரும்
கண்ணாடி பிரதிபலிப்புகளே!!!

**மா.அனிதா,**
பொருளறிவியல் துறை,
இரண்டாம் ஆண்டு





## தாய்

கடவுள் எனக்கு
கண்ணைப் படைத்தது
உலகைக் காண அல்ல
உன்னைக் காணத்தான்

## கண்-நீர்

என் கண்ணீரும்
ஒரு வரம் தான்
உன்னை நினைத்து
அழுகின்ற பொழுது!
என் புன்னகையும் சுமையாகும்
நீ என்னை
பிரிகின்ற பொழுது!

**ஈ.சரண்யா,**
தமிழ்த்துறை,
இரண்டாம் ஆண்டு

## முதியோர் இல்லத்தில் தாயின் கண்ணீர்

மகனே! நீ
இருக்க ஒரு அறை இருந்தது
என் வயிற்றில்
நான் இருக்க ஒரு அறை
கூடவா இல்லை
உன் வீட்டில்?



**பா.சித்ரா,**
கணிதத்துறை,
இரண்டாம் ஆண்டு

Scanned with CamScanner

# 96 வகைச் சிற்றிலக்கியங்கள்

- சாதகம்
- பிள்ளைத் தமிழ்
- பரணி
- கலம்பகம்
- அகப்பொருள் கோவை
- ஐந்திணைச் செய்யுள்
- வருக்கக் கோவை
- மும்மணிக் கோவை
- அங்க மாலை
- அட்ட மங்கலம்
- அநுராக மாலை
- இரட்டைமணி மாலை
- இணைமணி மாலை
- நவமணி மாலை
- நான்மணி மாலை
- நாம மாலை
- பலசந்த மாலை
- கலம்பக மாலை
- மணி மாலை
- புகழ்ச்சி மாலை
- பெருமகிழ்ச்சி மாலை
- வருத்த மாலை
- மெய்கீர்த்தி மாலை
- காப்பு மாலை
- வேனில் மாலை
- வசந்த மாலை
- தாரகை மாலை
- உற்சவ மாலை
- தானை மாலை
- மும்மணி மாலை
- தண்டக மாலை
- வீரவெட்சி மாலை
- வெற்றிக்கரந்தை மஞ்சரி
- போர்க்கெழு வஞ்சி
- வரலாற்று வஞ்சி
- செருக்கள வஞ்சி
- காஞ்சி மாலை
- நொச்சி மாலை
- உழிஞை மாலை
- தும்பை மாலை
- வானிக மாலை
- வதோரண மஞ்சரி
- எண்செய்யுள்
- தொகைநிலைச்செய்யுள்
- ஒலியல் அந்தாதி
- பதிற்றந்தாதி
- நூற்றந்தாதி
- உலா
- உலாமடல்
- வளமடல்
- ஒருபா ஒரு.:.பது
- இருபா இரு.:.பது
- ஆற்றுப்படை
- கண்படை நிலை
- துயிலெடை நிலை
- பெயரின்னிசை
- ஊரின்னிசை
- பெயர் நேரிசை
- ஊர் நேரிசை
- ஊர் வெண்பா
- விளக்க நிலை
- புறநிலை
- கடைநிலை
- கையறுநிலை
- தசாங்கப்பத்து
- அரசன் விருத்தம்
- நயனப்பத்து
- பயோதரப் பத்து
- பாதாதி கேசம்
- கேசாதி பாதம்
- அலங்காரப்பஞ்சகம்
- கைக்கிளை
- மங்கல வள்ளை
- தூது
- நாற்பது
- குழமகன்
- தாண்டகம்
- பதிகம்
- சதகம்
- செவியறிவுறூஉ
- வாயுறை வாழ்த்து
- புறநிலை வாழ்த்து
- பவனிக்காதல்
- குறத்திப் பாட்டு
- உழத்திப் பாட்டு
- ஊசல்
- எழுகூற்றிருக்கை
- கடிகை வெண்பா
- சின்னப் பூ
- விருத்த விலக்கணம்
- முதுகாஞ்சி
- இயன்மொழி வாழ்த்து
- பெருமங்கலம்
- பெருங்காப்பியம்
- சிறுங்காப்பியம்



**து.சம்பத்குமார்,**
உயிரறிவியல்,
இரண்டாமாண்டு

Scanned with CamScanner



## உலகின் மிகப் பெரியவைகள் :

உலகில் மிக உயரமான அருவி - ஏஞ்சல் அருவி
உலகில் மிக நீளமான ஆறு - அமேசான் ஆறு
உலகில் மிக பெரிய பாலைவனம் - சகாரா பாலைவனம்
உலகில் மிக பெரிய பீடபூமி - திபெத் பீடபூமி
உலகில் மிக பெரிய தீவு - கிரீன்லாந்து தீவு
உலகில் மிக பெரிய வளைகுடா - மெக்சிக்கோ வளைகுடா

## உலகில் பெரியவை - சிறியவை

உலகில் மிகப் பெரிய கண்டம் - ஆசியா கண்டம்
உலகில் மிகச் சிறிய கண்டம் - ஆஸ்திரேலியா கண்டம்
உலகில் மிகப் பெரிய நாடு - ரஷ்யா நாடு
உலகில் மிகச் சிறிய நாடு - வாடிகன் நகரம்
உலகில் மிகப் பெரிய தீபகற்பம் - சவூதி அரேபியா
உலகில் மிக உயர்ந்த மலைப்பகுதி - எவரெஸ்ட் சிகரம்



மு. முரளி
உயிரியியல் துறை,
முதலாம் ஆண்டு

## சிந்தனை துளிகள்

- நீ வெற்றி அடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்க முடியாது - **பிரெமர்**
- தியாகம் தான் வாழ்க்கை இது இயற்கை கற்றுத் தந்த பாடம் - **காந்திஜி**
- மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் எந்தவொரு தன்னம்பிக்கையை இழந்து விடக்கூடாது - **கதே**
- தன் குற்றம் மறுப்பதும், பிறர் குற்றம் காண்பதுமே முட்டாள் - **சிசரோ**
- உலகிலேயே வலிமை வாய்ந்த சக்தி அன்புதான் - **காந்தியடிகள்**
- பொறுமை, பிரார்த்தனையை விட உயர்ந்தது - **புத்தர்**
- தாயை விட மேலான ஆசான் இல்லை - **வால்மீகி**
- இன்பங்கள் சேர்ந்து வருவதில்லை, துன்பங்கள் தனியே வருவதில்லை - **ஷேக்ஸ்பியர்**
- நம் எண்ணங்களைப் பொறுத்தே நம் வாழ்க்கை அமைகிறது - **மார்க்ஸ்**
- மகிழ்ச்சி சகல நோய்களையும் தீர்க்கும் ஓர் அற்புதமான மருந்து - **ரஸ்கின்**
- பிரச்சினைகளின் போது துவண்டு விடாமல் எழுந்து நின்று செயல்படுபவர்களே வெற்றி பெறுவர் - **பிரிஸ்டல்**
- ஏழையானாலும் உள்ளத்தில் போதிய திருப்தி இருப்பின் அதுவே பெரிய செல்வமாகும் - **வில்லிங்கடன்**
- காலமென்னும் மூலிகை எல்லா நோய்களையும் குணப்படுத்த வல்லது. - **பெஞ்சமின் பிராங்கிளின்**

**த. மஞ்சமலமாதாதேவி,**
தமிழ்த்துறை, முதலாம் ஆண்டு

Scanned with CamScanner

## Funny Quizzes



1. Where you can find August before July?
   **Answer : In Dictionary**
2. Who is silent in the parliament?
   **Answer : The Letter 'A'**
3. When does an Indian potato changes its nationality?
   **Answer : When it becomes French Fries**
4. Why heat is consider faster than cold?
   **Answer : Heat, because you catch cold but not Heat.**
5. Where do fish keep their money?
   **Answer : At River bank**
6. What can fly but has no wings?
   **Answer : Time**
7. What do you call a fish without an eye?
   **Answer : fsh**

**எஸ். தாரணி**
கணிதத்துறை,
முதலாம் ஆண்டு

## Fun in English

1. Pneumonoultramicroscopicsilicovolcanocoriosis - (45 Letters)
   **It is lung disease caused by the inhalation of silica or quartz dust**
2. Pseudopseudohypoparathyroidism – ( 30 Letters)
   **It is a mild form of inherited in this word that stimulates the symptoms of the disorder but isn't associated with abnormal levels of calcium and phosphorus in the blood**
3. floccinaucinihilipilification – (29 Letters)
   **Is the estimation of something as valueless ironically, floccinaucinihilipilification is a pretty valueless word.**
4. Intidirestablishmentarianism – (28 Letters)
   **Originally described opposition to the disestablishment of the church of England, but now it may refer to any opposition to withdrawing government support of a particular church or religion.**
5. Supercalifragilisticexpialidocious – (34Letters)
   **Mary poppins described it as the word to use when you have nothing to say. It appears in some (but not all) dictionaries.**
6. Incomprehensibilities – (21 Letters)
   **Set the record in the 1990s as the longest word "In Common Usage".**
7. Honorificqbilitudinitatibus - (27 Letters)
   **A (27 Letter) way of saying "with honorableness"**
8. 26 Letters in the English alphabet in senesce "Pack my bon with five dozen liquor jugs".



**த. விக்னேஷ்,**
ஆங்கிலத்துறை, முதலாம் ஆண்டு

Scanned with CamScanner

# TEACHER'S PLEDGE

I Solemnly Pledge to what I Hold Dearly that as a Teacher

I Will Practice My Profession with Honour

I Will Abstain from Using Teaching Practise

Considered Inappropriate and

I Will Follow the Students and Guidelines for

My Profession to the All Most of My Power

Always Reaching for Excellence,

I Will Continue to Learn and Enhance

My Teaching Skills throughout My Career

I will be a Positive Role Model for Children and Youth and do

All that I can to Help them Acquire the Skills,

Knowledge and Desire they Need in

Order to Enjoy a Lifetime of Physical Activity

Scanned with CamScanner